சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.146/2018

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21 ம் நாள் பி.வாசா.3 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஜே. ஜூலியட் லில்லி புளோரா, தலைமை எழுத்தாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகதீஸ்வரி | வயது | 70 |
| க/பெ | திம்மையன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | இலுப்பநத்தம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | - |

**முதல் விசாரணை** :

எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் தீனப்ப கவுடர். எனது தாத்தா பெயர் என்ன என்றால் லிங்கப்ப கவுடர். அவர்களுக்கு பூர்வீகம் இலுப்பநத்தம் என்றால் சரி தான். நானும் அங்கு தான் குடியிருக்கிறேன். எனக்கு இராஜீ என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனார் இராஜீ என்பவர் எழுதிய பத்திரத்தில் கையொப்பம் செய்து உள்ளதாக என்னிடம் கூறி உள்ளாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ல் லிங்கப்ப கவுடர் மகன் தீனப்ப கவுடர், இலுப்பநத்தம் என்று உள்ளது. எனது தகப்பனாரின் முகவரி என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ல் உள்ளது என்னுடைய தகப்பனாரின் கையொப்பம் தானா என்றால் எனக்கு தெரியாது.

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இராஜீ என்பவரின் மகள் கார்த்திகா என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. இராஜீ என்பவர் மகன் பால குமார் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. சுமார் 2 மாதங்களுக்கு முன்னர் எனது அப்பா ( தீனப்ப கவுடர் )கையெழுத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல அழைத்த போது தான் அவரை பார்த்து உள்ளேன். அவர் என்னிடம் கேட்ட போது நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல மறுத்து விட்டேன் என்றால் கையெழுத்தே தெரியாத போது நான் எப்படி சாட்சி சொல்வேன் என்பதால் மறுத்து விட்டேன். சுமார் 2 மாதங்களுக்கு முன்னர் உடல் நிலை சரி இல்லாமல் நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தேன் என்றால் சரி தான். அப்போதும் பால குமார் நீதிமன்ற ஆணையர் மூலமாக என்னை விசாரிப்பதாக கூறினார் என்றால் சரி தான். ஆனால் எனக்கு எனது அப்பாவின் கையெழுத்து தானா என்று தெரியாததால் மறுத்து விட்டேன். அவர் என்னிடம் நான் மறுத்து விட்டால் நீதிமன்றத்தின் மூலமாக மனு செய்து என்னை அழைத்து செல்ல நேரிடும் என்று கூறினால் என்றால் சரி தான். இராஜீ வின் மகள் கார்த்திகா என்னிடம் சாட்சி சொல்ல போகக் கூடாது என்று கூறி உள்ளார் என்றால் சரி அல்ல. அவர் யார் என்றே எனக்கு தெரியாது. எனது அப்பாவின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்றும் நான் தற்போது வாதிக்கு ஆதரவாக பால குமாருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல.

## வாதி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஒம்/- கா.கெங்காராஜ்.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.